சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08.

ந.க.எண். 9331/அ5/2023, நாள். 21.03.2024

பொருள்: பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் - மார்ச் / ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள்- தேர்வு பணிக்காக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலகப் பணியாளர்கள் பணி விடுவிப்பு செய்தல் சார்பாக.

----

மார்ச் / ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுகள் 26.03.2024 முதல் 08.04.2024 வரை நடைபெறவுள்ளன. நடைபெறும் தேர்விற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள், முதன்மைக் கண்காணிப்பாளர்கள் , துறை அலுவலர்கள் , வழித்தட அலுவலர்கள் , பறக்கும் படை உறுப்பினர்கள் , அறைக்கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலகப் பணியாளர்களுக்கு சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலர்கள் மூலம் நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அறைக்கண்காணிப்பாளர்களுக்கான கூட்டம் 22.03.2024 ( வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் 2.30 மணிக்கு அந்தந்த தேர்வு மையங்களில் முதன்மைக் கண்காணிப்பாளர்களால் நடத்தப்பட உள்ளதால் அறைக்கண்காணிப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள அனைத்து ஆசிரியர்களையும் குறித்த நேரத்தில் கூட்டத்தில் கலந்து கொள்ள ஏதுவாக பணிவிடுவிப்பு செய்து அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொதுத் தேர்வு பணி முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதால் நியமனம் செய்யப்பட்டுள்ள அனைத்து அலுவலர்களையும் பொதுத் தேர்வு பணி மேற்கொள்ளும் பொருட்டு பணிவிடுவிப்பு செய்து அனுப்புமாறு அனைத்து வகை உயர் நிலை / மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

21.3.24

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை-08.

பெறுநர்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை , தனியார் பள்ளிகள், தொடக்கக் கல்வி), சென்னை மாவட்டம்
3. அனைத்து வகை உயர் நிலை / மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள். சென்னை மாவட்டம்

நகல்

1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
2. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
3. இயக்குநர், அரசுத் தேர்வுகள் துறை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது